கிராமப் புறங்களுக்கு தடையின்றி குடிநீர் கிடைக்க நடவடிக்கை

குடிநீர் வடிகால் வாரிய மேலாண் இயக்குநர் அறிவுறுத்தல்

திருவாரூர், ஜூலை 31: அனைத்து உள்ளாட்சி அமைப்புகளும் ஒருங்கிணைந்து செயல்பட்டு, கிராமப் புறங்களுக்கு குடிநீர் விநியோகம் செய்வதில் எவ்வித இடையூறும் ஏற்படாத வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் அறிவுறுத்தினார்.

திருவாரூர் மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால், செயல்படுத்தப்படும் கூட்டு குடிநீர்த் திட்டப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர், மாவட்ட ஆட்சியர் வ. மோகனச்சந்திரன் ஆகியோர் தலைமையில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

திருவாரூர் மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் நடைபெற்ற குடிநீர்த் திட்டப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டத்தில் பேசுகிறார் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர். உடன், மாவட்ட ஆட்சியர் வ. மோகனச்சந்திரன் உள்ளிட்டோர்.

கூட்டத்தில், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் தெரிவித்தது:

திருவாரூர் மாவட்டத்தில் குடிநீர் பற்றாக்குறை உள்ள பகுதிகளை உடனடியாகக் கண்டறிந்து, தேவையான மாற்று ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். திருவாரூர் மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் 667 கூட்டு குடிநீர் திட்டத்தின் மூலம் அனைத்து ஊராட்சிகளுக்கும் முழு அளவில் குடிநீர் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும்.

மேலும் திருத்துறைப்பூண்டி நகராட்சி, முத்துப்பேட்டை பேரூராட்சி, முத்துப்பேட்டை மற்றும் திருத்துறைப்பூண்டி ஊரகப் பகுதிகளுக்கு போதுமான அளவு குடிநீர் கிடைக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். குடிநீரின் தரத்தை தொடர்ந்து பரிசோதனை செய்து, பாதுகாப்பான குடிநீர் வழங்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

கோடைக்காலம் மற்றும் அவசர கால தேவைகளை முன்னிட்டு கூடுதல் குடிநீர் விநியோகத் திட்டங்களை தயாராக வைத்திருக்க வேண்டும். அனைத்து உள்ளாட்சி அமைப்புகளும் ஒருங்கிணைந்து செயல்பட்டு, குடிநீர் விநியோகத்தில் எவ்வித இடையூறும் ஏற்படாத வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

கூட்டத்தில், குடிநீர் வடிகால் வாரியம் தஞ்சாவூர் தலைமை பொறியாளர் ஜெயக்குமார், தஞ்சாவூர் கண்காணிப்பு பொறியாளர் ஜெயக்குமார், திருவாரூர் நிர்வாகப் பொறியாளர் இளங்கோவன் ஆகியோர் பங்கேற்றனர்.

துர்க்கை அம்மனுக்கு மஞ்சள் நீராட்டு வழிபாடு

மன்னார்குடி, ஜூலை 31: மன்னார்குடியில் ஆடி மாத வெள்ளிக்கிழமையையொட்டி, அருள் சித்தர் துரை ராஜ் சுவாமிகள் மடாலயத்தில் துர்க்கை அம்மனுக்கு மஞ்சள் நீராட்டு விழா நடைபெற்றது.

இந்து அன்னையர் முன்னணி சார்பில் நடைபெற்ற இந்நிகழ்வுக்கு, அதன் மாவட்டச் செயலர் மணிமேகலை தலைமை வகித்தார். ருக்மணிபாளையம் நடராஜப் பிள்ளைதெரு கற்பக விநாயகர் கோயிலில் இருந்து நூற்றுக்கும் மேற்பட்ட பெண்கள், குடங்களில் மஞ்சள் நீரை சுமந்து ஊர்வலமாக வந்தனர்.

பின்னர், துர்க்கை அம்மனுக்கு பால், சந்தனம், பன்னீர், இளநீர் உள்ளிட்ட திரவியங்கள் கொண்டு அபிஷேகம் நடைபெற்றது. தொடர்ந்து, பெண் பக்தர்கள் ஊர்வலமாக கொண்டு வந்த மஞ்சள் நீர் கொண்டு அம்மனுக்கு மஞ்சள் நீராட்டு நடைபெற்றது. அப்போது பெண்கள் 108 போற்றி பாடலை பாடி அம்மனை வழிபட்டனர்.

பின்னர், விவசாயம் செழிக்க வேண்டி சிறப்பு கூட்டு பிரார்த்தனை நடைபெற்றது. நகரத் தலைவர் வசந்தி, செயற்குழு உறுப்பினர்கள் ராஜ திலகா, சரண்யா, சந்திரா உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

பழங்கள் தினம் கொண்டாட்டம்

பழங்களின் வடிவிலான ஆடைகளை அணிந்து வந்த மாணவ– மாணவிகள்.

மன்னார்குடி, ஜூலை 31: மன்னார்குடி தேவி மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளியில் பழங்கள் தினம் அண்மையில் கொண்டாடப்பட்டது.

நிகழ்ச்சிக்கு, தாளாளர் எம். பிரதாப் தலைமை வகித்தார். செயலர் ஆர். சங்கீதா, தலைமை ஆசிரியர் எம். கனி ஆகியோர் முன்னிலை வகித்தனர். மழலையர் வகுப்பு முதல் இரண்டாம் வகுப்பு வரை உள்ள மாணவர்கள் பழங்களின் வடிவிலான ஆடைகளை அணிந்து, பழங்களில் உள்ள ஊட்டச்சத்துகள், வைட்டமின்கள், நோய் எதிர்ப்பு சக்தி, ஆரோக்கியம் ஆகியவை குறித்து எடுத்துரைத்தனர். பழங்களை மையமாகக் கொண்டு வகுப்பறைகள் அலங்கரிக்கப்பட்டிருந்தன. பல்வேறு பழங்களின் மாதிரிகள் மற்றும் இயற்கை பழங்களைக் கொண்டு கண்காட்சி அரங்குகளை அமைத்திருந்தனர். தேவி மெட்ரிக். மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் கலந்துகொண்டு, மாணவர்களின் படைப்பாற்றல், பேச்சுத்திறனை பாராட்டினர்.

ஆக.3–இல் கூடைப்பந்து பயிற்சி தேர்வுப் போட்டி

திருவாரூர், ஜூலை 31: திருவாரூர் மாவட்டத்தில், கூடைப்பந்து பயிற்சி பெற விரும்பும் மாணவ– மாணவிகள் ஆகஸ்ட் 3–ஆம் தேதி நடைபெறும் தேர்வுப் போட்டிகளில் பங்கேற்கலாம் என ஆட்சியர் வ. மோகனச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு: தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மூலம் எஸ்டிஏடி ஸ்டார் அகாதெமி மாவட்ட பயற்சி மையம், மாவட்ட விளையாட்டரங்கத்தில் கூடைப்பந்து விளையாட்டு பயிற்சி நடைபெறவுள்ளது. இம்மையத்தில் குறைந்தது 20 மாணவர்கள், 20 மாணவிகள் வரை சேர்க்கப்பட்டு, அவர்களுக்கு தினசரி பயிற்சி அளிக்கப்படும். இப்பயிற்சி மையத்தில் சேர 6–ஆம் வகுப்பு முதல் பிளஸ் 2 வகுப்பு வரை பயிலும் பள்ளி மாணவ–மாணவிகளுக்கான தேர்வுப் போட்டிகள் ஆகஸ்ட் 3– ஆம் தேதி மாலை 4.30 மணிக்கு மாவட்ட விளையாட்டரங்கத்தில் நடைபெறவுள்ளது.

இத்திட்டத்தில் தேர்வு செய்யப்படும் மாணவ– மாணவிகளுக்கு சிறந்த பயிற்சியாளர் மூலம் தினசரி காலை 6 மணி முதல் 8 மணி வரையிலும், மாலை 4.30 முதல் 6.30 மணி வரையிலும் பயிற்சி அளிக்கப்பட்டு, சிற்றுண்டிகளும் வழங்கப்படும். மேற்படி மாணவ– மாணவிகளுக்கு சிறப்பாக பயிற்சி அளிக்கப்பட்டு, அவர்கள் மாநில, தேசிய மற்றும் சர்வதேச அளவிலான போட்டிகளில் பங்கேற்கும் வகையில் உருவாக்கப்படுவர். போட்டிகளில் பங்கேற்க அரசு செலவில் அழைத்துச் செல்லப்படுவர். தேர்வு செய்யப்படும் மாணவ– மாணவிகளுக்கு விளையாட்டுச் சீருடைகள் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் வழங்கப்படும். எனவே, கூடைப்பந்து தேர்வுப் போட்டிக்கு பள்ளிகளில் பயிலும் விருப்பமுள்ள மாணவ–மாணவிகள் பங்கேற்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காவிரியில் தண்ணீர் கோரி விவசாயிகள் ஆர்ப்பாட்டம்

மன்னார்குடி அருகே பெரியகுருவாடியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட விவசாயிகள்.

மன்னார்குடி, ஜூலை 31: கர்நாடக அரசு காவிரியில் தண்ணீர் திறந்துவிட வலியுறுத்தி, மன்னார்குடியை அடுத்த பெரியகுருவாடியில் விவசாயிகள் வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தண்ணீரின்றி விவசாயம் பாதிக்கப்பட்ட வயலில் நின்று ஆர்ப்பாட்டம் நடத்தினர். கர்நாடக அரசு காவிரி மேலாண்மை ஆணைய உத்தரவை நிறைவேற்ற மறுத்து, அனைத்துக் கட்சி கூட்டம் கூட்டுவதை மத்திய அரசு தடை விதிக்க வேண்டும்.

விவசாயிகள் தற்கொலைகளை தடுக்க ஆணையத்தின் உத்தரவை ஏற்று மத்திய அரசு கர்நாடகாவிடம் தண்ணீரை பெற்று தர வேண்டும். அரசியல் அமைப்புச் சட்டத்தை மீறி கர்நாடகம் செயல்படுவதை மத்திய அரசு வேடிக்கை பார்க்கக் கூடாது. உடனடியாக தண்ணீரைப் பெற்று நிலத்துடி நீரையாவது பாதுகாப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என ஆர்ப்பாட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

தமிழக காவிரி விவசாயிகள் சங்கத்தின் பொதுச் செயலர் பி.ஆர். பாண்டியன் தலைமை வகித்தார். தண்ணீர் இன்றி விவசாயம் செய்யமுடியாது. தரிசாக கிடக்கும் வயலில் இறங்கி விவசாயிகள், காவிரியிலிருந்து தமிழகத்திற்கு தண்ணீர் திறந்துவிட கோரியும், கர்நாடக அரசுக்கு மத்திய அரசு துணைபோவதை கண்டித்தும் கோஷங்கள் எழுப்பினர். ஆர்ப்பட்டத்தில் பங்கேற்ற பெண்கள் மாரடித்து கோரிக்கையை வலியுறுத்தினர். காவிரி விவசாயிகள் சங்கத்தின் கோட்டூர் வடக்கு ஒன்றியத் தலைவர் கே. சேகர், உயர்மட்டக் குழு உறுப்பினர்கள் செல்வராஜ், செந்தில் குமார், கண்ணன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

அரசுப் பள்ளிகளில் ஆட்சியர் ஆய்வு

நன்னிலம், ஜூலை 31: நன்னிலம் வட்டம், பூந்தோட்டம் மற்றும் பேரளம் அரசுப் பள்ளிகளில், திருவாரூர் மாவட்ட ஆட்சியர் வ. மோகனச்சந்திரன் வெள்ளிக்கிழமை நேரில் ஆய்வு மேற்கொண்டார்.

பூந்தோட்டம் அரசு மேல்நிலைப் பள்ளியில் குடிநீர், சமையலறை, கழிவறை உள்ளிட்ட அடிப்படை வசதிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். அப்போது குடிநீர் மற்றும் கழிவறைகளை தினந்தோறும் பராமரிக்க அறிவுறுத்தினார். பள்ளியின் சமையல் கூடத்தில் மாணவர்களுக்கு வழங்க மதிய உணவு தயார் செய்யப்பட்டுள்ளதைப் பார்வையிட்டு, உணவின் தரம் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

தொடர்ந்து, பத்தாம் வகுப்பு மாணவர்களுடன் கலந்துரையாடினார். கணினி வழியே பொலிவுறு வகுப்பு (ஸ்மார்ட் கிளாஸ்) பாடம் கற்பிக்கப்படுவதை பார்வையிட்டு, மாணவர்களிடம் வகுப்பு குறித்து கேட்டறிந்தார். தற்போது ஒன்பதாம் வகுப்பு பயிலும் மாணவி தேவஸ்ரீ, எட்டாம் வகுப்பு பயிலும்போது, தேசிய திறனறித் தேர்வில் மாவட்டத்தில் முதலிடம் பெற்றார். இதையொட்டி, தேவஸ்ரீக்கு ஆட்சியர் புத்தகம் வழங்கி பொன்னாடை போர்த்தி வாழ்த்தினார்.

பின்னர், பேரளம் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் ஆட்சியர் ஆய்வு மேற்கொண்டார். தொடர்ந்து, கரதிருமாளம் ஊராட்சி மோட்டாத்தூர் கிராமத்தில் மகளிர் சுயஉதவிக் குழு உறுப்பினர்களுக்கான முழு அடையாளத்தை உறுதிப்படுத்தும் முக அடையாளம் பதிவேற்றம் செய்யப்பட்டு வருவதை நேரில் பார்வையிட்டார். இந்த ஆய்வுகளில் பள்ளி தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்கள் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

டிஎன்சிஎஸ்சி எம்ப்ளாயீஸ் யூனியன் கூட்டம்

மயிலாடுதுறை, ஜூலை 31: மயிலாடுதுறை திமுக அலுவலகமான அண்ணா பகுத்தறிவு மன்றத்தில் டிஎன்சிஎஸ்சி எம்ப்ளாயீஸ் யூனியன் செயற்குழுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

மண்டல சிறப்பு தலைவர் ஜி. முத்தையன் தலைமை வகித்தார். மண்டல தலைவர் பொன்.நக்கீரன், மாநில தொமுச பேரவை உறுப்பினர் சேரன் செங்குட்டுவன், மாநில அமைப்பு செயலாளர் பி. சுந்தர், மாவட்ட தொமுச பேரவை துணைத் தலைவர் எம். தமிழழகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் ஆனந்ததாண்டவபுரம் நேரடி நெல் கொள்முதல் நிலைய சுமைதூக்கும் பணியாளர் ஆர். மனோகரன் உயிரிழந்ததை தொடர்ந்து அவருடைய குடும்பத்தாருக்கு குடும்ப சேமநல உதவித்தொகை ரூ.10,000 வழங்கப்பட்டது.

தொடர்ந்து, கடலூர் மாவட்டத்தில் ஆய்வு நடத்திய தமிழக உணவுத்துறை அமைச்சர், நேரடி நெல் கொள்முதல் நிலைய பணியாளரை மோசமான முறையில் சித்தரித்து, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நற்பெயரையும், தொழிலாளர்களின் உழைப்பையும் கலங்கப்படுத்தும் வகையில் ரீல்ஸ் வெளியிட்டதற்கு கண்டனம் தெரிவிப்பதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மேலும், 10 ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றும் கொள்முதல் நிலையப் பணியாளர்களை பணி நிரந்தரம் செய்ய வலியுறுத்துவது, மயிலாடுதுறை மண்டலத்தில் காலியாக உள்ள பட்டியல் எழுத்தர், உதவியாளர், காவலர் பணிகளுக்கு உடனடியாக நேர்முகத் தேர்வு முடித்த பணியாளர்களை பணியமர்த்தி, கொள்முதல் பணி தொய்வின்றி நடந்திட நிர்வாக இயக்குநரை கேட்டுக் கொள்வது என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பான் செக்கர்ஸ் மகளிர் கல்லூரி விளையாட்டு விழா

ஒட்டுமொத்த சாம்பியன் பட்டம் பெற்ற ஸ்டார்ஸ் அணியினர்.

மன்னார்குடி, ஜூலை 31: மன்னார்குடி பான் செக்கர்ஸ் கலை அறிவியல் மகளிர் கல்லூரி 9–ஆம் ஆண்டு விளையாட்டு விழா வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு, கல்லூரி முதல்வர் கேத்தலினா தலைமை வகித்தார். செயலர் அம்புரோஸ் மேரி முன்னிலை வகித்தார். உடற்கல்வி இயக்குநர் ந. சுஜா, விளையாட்டு நிகழ்வு ஆண்டறிக்கை வாசித்தார்.

மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நல அலுவலர் எஸ்.எம். குமரன், சிறப்பு அழைப்பாளராக கலந்துகொண்டு ஒலிம்பிக் ஜோதியை ஏற்றி வைத்து போட்டியை தொடங்கி வைத்தார்.

திருச்சி தெற்கு ரயில்வே பயணச் சீட்டு ஆய்வாளரும் சர்வதேச தடகள வீரருமான எஸ். யோகராஜ், மாவட்ட அமெச்சூர் கபடி கழக புரவலர் எஸ். மீனாட்சி ஆகியோர் கௌரவ அழைப்பாளர்களாக கலந்துகொண்டனர்.

மாணவிகள் கிங், ராக்கர்ஸ், வாரியர்ஸ், ஸ்டார்ஸ் ஆகிய நான்கு அணிகளாகப் பிரிக்கப்பட்டு, பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டன. இதில், ஒட்டுமொத்த சாம்பியன் பட்டத்தை ஸ்டார்ஸ் அணியினர் பெற்றனர்.

சிறப்பு மற்றும் கௌரவ அழைப்பாளர்கள், போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவிகளுக்கும், சிறப்பிடம் பெற்ற அணிகளுக்கும் பரிசு கோப்பை மற்றும் சான்றிதழ் வழங்கினர். உடற்கல்வி பயிற்றுநர் அ. சிவரஞ்சனி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

முன்னதாக, ஆங்கிலத் துறைத் தலைவர் க. கற்பகம் வரவேற்றார். நிறைவாக, வணிக மேலாண்மை துறைத் தலைவர் ஞா. ஞானச் செல்வி நன்றி கூறினார்.

MUTHOOT FINCORP LTD. | தங்க நகை ஏல அறிவிப்பு

Regd. Office: Muthoot Centre, TC No 27/3022, Punnen Road, Thiruvananthapuram, Kerala, India - 695001. CIN : U65929KL1997PLC011518, Ph: +91 471 4911400, 2331427.

எமது நிறுவனத்தின் கீழ்க்கண்ட கிளைகளில் அடமானம் வைக்கப்பட்டு முடிக்கப் பெறாத நகைக் கடனுக்காக பதிவு தபால் ஒப்புதல் அட்டையுடன் ஏல அறிவிப்பைப் பெற்று இன்றய தேதி வரை மீட்கப்படாத மற்றும் அவ்விதம் அனுப்பப்பட்ட அஞ்சலைப் பெறாத அடகு வைத்தவர்களின் நகைகள் 02.09.2026 அன்று காலை 10.00 மணி முதல்.

Auction Date: 02.09.2026 - ARIYALUR DISTRICT - ANDIMADAM: 3806001159, 3806001176, 3806001205, 3806001210, 3806001295, 3806001316, 3806001353, 3806001383, 3806001389, 3806001433, 3806001482, 3806001486, 3806001517, 3806001534, 3806001628, 3806001629, 3806001639, 3806001645, 3806001711, 3806001712, 3806001729, 3806001765, 3806001803, 3806001823, 3806001824, 3806001835, 3806001836, 3806001848, 3806001875, 3806001893, 3806001905, 3806001920, 3806001971, 3806001987, 3806001991, 3806001993, 3806002000, 3806002002, 3806002021, 3806002022, 3806002058, 3806002068, 3806002073, 3806002110, 3806002143, 3806002189, 3806002207, 8000033806, 8000043806. **ARIYALUR:** 1415000779, 1415000806, 1415000859, 1415001004, 1415001007, 1415001082, 1415001096, 1415001097, 1415001119, 1415001187, 1415001212, 1415001234, 1415001285, 1415001304, 1415001310, 1415001353, 1415001397, 1415001398, 1415001431, 8000351415. **JAYANKONDAM:** 3630000799, 3630000855, 3630000986, 3630000994, 3630001005, 3630001037, 3630001041, 3630001045, 3630001046, 3630001062, 3630001080, 3630001081, 3630001087, 3630001091, 3630001155, 3630001206, 3630001260, 3630001262, 3630001281, 3630001291, 3630001409, 3630001511. **Auction Date: 02.09.2026 - MAYILADUTHURAI DISTRICT - KUTHALAM:** 4155000641, 4155000792, 4155001050, 4155001159. **MAYILADUTURAI-KORANAD:** 1614000683, 1614000789, 1614000792, 1614000808, 1614000846, 1614000861, 1614000918, 1614000929, 1614000954, 1614000956, 1614000961, 1614000976, 1614000980, 1614001019, 1614001029, 1614001074, 1614001339, 1614001371, 1614001493. **MYLADUTHURAI:** 0271000789, 0271000792, 0271000848, 0271000892, 0271000894, 0271000953, 0271000970, 0271000972, 0271000973, 0271000990, 0271000994, 0271001041, 0271001064, 0271001075, 0271001128, 0271001236, 0271001240, 0271001267, 0271001337, 0271001400, 0271001426, 0271001440, 0271001477, 0271001511, 0271001522, 0271001534, 0271001540, 0271001555, 0271001563, 0271001581, 0271001609, 8000320271, 8000350271. **SIRKALI:** 0430000803, 0430000859, 0430000955, 0430000960, 0430001050, 0430001074, 0430001138, 0430001164, 0430001167, 0430001185, 0430001201, 0430001349, 0430001434, 0430001456, 0430001560, 0430001585, 0430001586, 0430001588, 0430001616, 0430001646, 0430001683, 0430001746, 0430001751. **Auction Date: 02.09.2026 - THANJAVUR DISTRICT - ATHIRAMPATTINAM:** 1798000696, 1798000705, 1798000743, 1798000810, 1798000949, 1798000950, 1798000968, 1798000988, 1798000995, 1798001024, 1798001033, 1798001034, 1798001035, 1798001062, 1798001272, 1798001280, 1798001307, 1798001342, 1798001364, 1798001370, 1798001371, 1798001498, 1798001570. **AYYAMPETTAI-THANJAVUR:** 3498000731, 3498000838, 3498000839, 3498000917, 3498000920, 3498000934, 3498000938, 3498000966, 3498001007, 3498001163, 3498001202. **KUMBAKONAM:** 0309000926. **KUMBAKONAM-2:** 1411000863. **PAPANASAM:** 1383000649, 1383000676, 1383000705, 1383000724, 1383000749, 1383000777, 1383000822, 1383000831, 1383000852, 1383000869, 1383000929, 1383001066, 1383001075, 1383001109, 1383001155, 1383001232. **PATTUKOTTAI:** 0301000778, 0301000846, 0301000908, 0301000931, 0301001057, 0301001062, 0301001068, 0301001112, 0301001176, 0301001220, 0301001223, 0301001385, 0301001400, 0301001473, 0301001485, 0301001487, 0301001535, 0301001549, 0301001564, 0301001567, 0301001606. **PERAVURANI:** 0404001343, 0404001377, 0404001453, 0404001504, 0404001510, 0404001572, 0404001605, 0404001612, 0404001646, 0404001658, 0404001906, 0404002002, 0404002052, 0404002091, 0404002095, 0404002108, 0404002110, 0404002113, 0404002128, 0404002162, 0404002171, 0404002174, 0404002202, 0404002209, 0404002249, 0404002253, 8000730404. **THANJAVUR:** 0334000571, 0334000698, 0334000761, 0334001017, 0334001045, 0334001052, 0334001068, 0334001165, 8000480334. **THANJAVUR EAST GATE:** 0596001008, 0596001094, 0596001132, 0596001133, 0596001146, 0596001149, 0596001155, 0596001163, 0596001167, 0596001207, 0596001292, 0596001385, 0596001418, 0596001434, 0596001489, 0596001553, 0596001580, 0596001672. **THANJAVUR-M.C.ROAD:** 1312001295, 1312001364, 1312001392, 1312001448, 1312001459, 1312001627, 1312001632, 1312001640, 1312001660, 1312001664, 1312001674, 1312001679, 1312001683, 1312001684, 1312001746, 1312001748, 1312001750, 1312001789, 1312001800, 1312001818, 1312001884, 1312001945, 1312001997, 1312002010, 1312002011, 1312002016, 1312002019, 1312002041, 1312002059, 1312002065, 1312002085, 1312002091, 1312002108, 1312002110, 1312002131, 1312002150, 1312002174, 1312002193, 1312002194, 1312002195, 1312002249, 1312002256, 1312002257, 8000111312, 8000441312, 8000561312, 8000661312. **THANJAVUR-NEW BUS STAND:** 3408001249, 3408001259, 3408001342, 3408001361, 3408001379, 3408001393, 3408001394, 3408001447, 3408001458, 3408001534, 3408001593, 3408001726, 3408001749, 3408001935, 3408001967, 3408002070. **THIRUCHITRAMBALAM:** 1910000889, 1910000993, 1910001004, 1910001123, 1910001132, 1910001167, 1910001173, 1910001186, 1910001195, 1910001200, 1910001219, 1910001306, 1910001338, 1910001406, 1910001519, 1910001529, 1910001570, 1910001601, 1910001686, 1910001717. **THIRUPANANTHAL:** 3942000878, 3942000887, 3942000921, 3942000973, 3942000983, 3942001107, 3942001128, 3942001153, 3942001177, 3942001241, 3942001246, 3942001295, 3942001343, 3942001359, 3942001360, 3942001371, 3942001373, 3942001390, 3942001423, 3942001481, 3942001505, 3942001527, 3942001529, 3942001554, 3942001564, 3942001582, 3942001586, 3942001619, 3942001633, 3942001635, 3942001676, 3942001686, 3942001721, 3942001755, 3942001758, 3942001773, 3942001778, 3942001784, 3942001790, 3942001811, 3942001870, 3942001877. **THIRUVAIYARU:** 1369000936, 1369001169, 1369001175, 1369001210, 1369001217, 1369001244, 1369001253, 1369001261, 1369001289, 1369001325, 1369001334, 1369001405, 1369001419, 1369001486, 1369001531, 1369001649, 1369001650, 1369001668, 1369001678, 1369001754, 1369001830.

ஆகிய கிளைகளில் அடகு வைத்த நகைகளை Auction will be conducted at respective branches. please note if the auction does not get completed on the same day due to any reasons, the same will be conducted on 15.09.2026 at 10.00 am at THANJAVUR DISTRICT - KUMBAKONAM: FIRST FLOOR, RAJ & RAJ COMPLEX , 53, MOTHILAL STREET,, NEARANJANEYAR TEMPLE , KUMBAKONAM, TAMIL NADU , 612001 . என்ற விலாசத்தில் உள்ள கம்பெனியின் அலுவலக கட்டிடத்தில் பகிரங்கமாக ஏலம் நடைபெறும் என்று இந்த அறிவிப்பின் வாயிலாக தெரிவிக்கப்படுகிறது ஏலம் கேட்க விரும்புகிறவர்கள் தங்கள் முகவரி பத்திரம் (id proof) மற்றும் அடையாளப் பத்திரத்தைக் (pancard)கொண்டு வருவதுடன் ஏலம் எடுப்பவர்கள் RTGS மூலம் ரொக்கத்தை பரிமாற்றம் செய்ய வேண்டும் .

முத்தூட் ஃபின்கார்ப் லிமிடெட்

UJJIVAN SMALL FINANCE BANK

பதிவு அலுவலகம்: கிரீப் கார்டன், எண்.27, 3வது A குறுக்கு, 18வது மெயின், கோரமங்கலா 6வது பிளாக், கோரமங்கலா, பெங்களூர்-560095.
கிளை அலுவலகம்: எண்.74, அன்னாகாமாட்சி டவர், தெற்கு வீதி, வார்டு எண்.2, பிளாக் எண்.38, தெற்கு கிராமம், திருவாரூர், தமிழ்நாடு-610001

இ-ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச்சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 பாதுகாப்புநுடைமுறை விதிகள் 2002 விதி எண். 8(6) & 9(1)-ன் கீழ் அசையா சொத்தின் இ-ஏல விற்பனை அறிவிப்பு.

SARFAESI சட்டம் 2002 பிரிவு 13(4) ன்கீழ் உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஆனவர் தமக்குள்ள அதிகாரத்தை பயன்படுத்தி பின்வரும் சொத்தினை கவாதீனம் செய்துள்ளார். கடன் நிலுவைத் தொகையை வசூலிக்கும் பொருட்டு, கீழ்க்கண்ட கடன் கணக்குகளின் அடமான சொத்து "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" ஏலம் அடிப்படையில் கீழ்க்கண்ட தேதியில் விற்பனை செய்யப்படும் என இதன் மூலம் கடன்தாரருக்கும் மற்றும் பொது மக்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

கடன் கணக்கு எண் / கடன்தார்கள் பெயர்	(i) 13-2 அறிவிப்பு தேதி & நாளது தேதிப்படி கோரிக்கையில் கோரப்பட்ட கடன்தொகை (ii) கவாதீனம் எடுத்த தேதி	29.07.2026 அன்றுள்ளபடி கடன் நிலுவைத்தொகை	குறைந்தபட்ச கேட்பு விலை	டேவணித்தொகை (EMD)
1639210030000002 1.Mr.சண்முகம்.T, 2. Mrs.மலர்கொடி	(i) 13.07.2021 & 23.09.2021 அன்றுள்ளபடி ₹ 9,75,915/- (ரூபாய் ஒன்பது லட்சத்து எழுபத்து ஐந்தாயிரத்து தொள்ளாயிரத்து பதினைந்து மட்டும்) (ii) அடையாளபூர்வமான கவாதீனம் & நேரடியான கவாதீனம் 14.09.2022 & 14.11.2025	₹ 9,39,683.97 (ரூபாய் ஒன்பது லட்சத்து முப்பத்து ஒன்பதாயிரத்து அறுநூற்று எண்பத்து மூன்று மற்றும் பைசா தொண்ணூற்று ஏழு மட்டும்)	₹ 5,17,000/- (ரூபாய் ஐந்து லட்சத்து பதினேழாயிரம் மட்டும்)	₹ 51,700/- (ரூபாய் ஐம்பத்தொராயிரத்து எழுநூறு மட்டும்)

சொத்து விவரம்: நாகப்பட்டினம் பதிவு மாவட்டம், திருவாரூர் சார் பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட R.S.எண்.60/15, **நாரணமங்கலம் கிராமம், திருவாரூர் பஞ்சாயத்து யூனியன், திருவாரூர் வட்டம், திருவாரூர் மாவட்டம்** என்னும் முகவரியில் **100 சதுர மீட்டர் மனை, அதனுடன்** RCC **கட்டிடம்** மற்றும் அனைத்து இதர வசதிகள், அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். அவைகள்: கிழக்கு மேற்காக: வடக்கு பக்கம் 8 மீட்டர், தெற்கு பக்கம் வடிவமற்ற, தெற்கு வடக்காக: கிழக்கு பக்கம் 13.6 மீட்டர், மேற்கு பக்கம் 14 மீட்டர் மொத்தம் 100 சதுர மீட்டர். எல்லைகள்: கிழக்கு: சுப்பையன் வீட்டு மனை, மேற்கு: சாமிக்கண்ணு வீட்டு மனை, தெற்கு: பாண்டியையாரு

இ-ஏல தேதி மற்றும் நேரம் : 21.08.2026 காலை 11.00 மணியிலிருந்து நண்பகல் 12.00 மணி வரை

விலைக்குறிப்பிடுகளை சமர்ப்பிக்க கடைசி	சொத்தினை பார்வையிடும் தேதி & நேரம்
தேதி: 20.08.2026 அன்றோ அதற்கு முன்னரோ காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை	19.08.2026 காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை

மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ள வேண்டிய வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
Mr.S.ஞானவேல் - 98410 17131 / Mr.டிஜோ ஷாஜன் - 78451 92961

இ-ஏலமானது "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் விற்பனை செய்யப்படும்.
இ-ஏலமானது உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட இ-ஏல சேவை வழங்குனரான **M/s.C1 India PVT LTD.** மூலம் நடைபெறவுள்ளது. (தொடர்புக்கு **Mr. Prabhakaran (Mob: 74182 81709))** உத்தேச விலைக்குறிப்பிட்டாளர்கள் இணையதளத்தில் உள்ள சொத்துக்களின் விவரங்களுக்கு https://www.bankeauctions.com or https://www.ujjivansfb.in/e-auctions பார்வையிடலாம் மற்றும் விலைக்குறிப்பிட்டில் பங்கேற்பதற்காக அவர்கள் தங்கள் பெயரை https://www.bankeauctions.com-ல் பதிவு செய்து பயனாளர் ID மற்றும் கடவுச்சொல்லினை